உ

கடவுள் துணை.

# சாவல்பாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமைது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

127

உ

கடவுள் துணை.

# சாவல்பாட்டு

## காப்பு கலிவிருத்தம்

தேவதேவர்கள் போற்றிடுமீசனின்
சேவடிதனை சென்னியிலேவைத்து
சாவலின்கதை சாற்றிடபூவினில்
ஆவலாய்வரு மைங்கரன்காப்பதே.

கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி-தாளம்-அடதாளசாப்பு

என்சாவல்போனவிட மெனக்குத்தெரியாதே
    யெந்தன்துரைரங்கசாமி யென்னசொல்லுவாரோ
என்னசொல்லுவாரோ அவர்க் கிஷ்டமுள்ளசாவல்
    இஷ்டமுள்ளசாவல்தனை யெவளோபிடித்தாளோ

நல்லசிறுதொட்டில்கட்டி நான்வளர்த்தசாவல்
நான்வளர்த்தசாவல்தனை நஷ்டமிட்டவளாரோ
தங்கத்தினால்சிலங்கைகட்டி தரையில்விட்டசாவல்
தரையில்விட்டசாவல்தனை சாற்றிக்கொண்டவளாரோ
முத்துமணிகட்டியெந்தன் முன்னேவிட்டசாவல்
முன்னேவிட்டசாவல்தனை மூடிக்கொண்டவளாரோ
பவழமணிகட்டியிப்போ பார்த்துவிட்டசாவல்
பார்த்துவிட்டசாவல்தனை பதுங்கவைத்தவளாரோ
வெள்ளியினால்சலங்கைகட்டி வெளியில்விட்டசாவல்
வெளியில்விட்டசாவல்தனை வேண்டிக்கொண்டவளாரோ
பொன்னதினால்சலங்கைகட்டிப் போகவிட்டசாவல்
போகவிட்டசாவல்தனை பிடித்துக்கொண்டவளாரோ
காதுகுத்திகடுக்கனிட்டு கடையில்விட்டசாவல்
கடையில்விட்டசாவல்தனை கட்டழைத்தவளாரோ
கொண்டைதனில்குப்பிகட்டி சூலாவிவிட்டசாவல்
சூலாவிவிட்டசாவல்தனை கூட்டிப்போனவளாரோ
பச்சைரெக்கைபளபளென்ன பறந்துவருஞ்சாவல்
பறந்துவருஞ்சாவல்தனைப் பார்த்தணைத்தவளாரோ

துத்தியப்பூவர்னமுள்ள துரைசாமியின்சாவல்
துரைசாமியின்சாவலுக்கு சூதுசெய்தவளாரோ
வர்ணமயில்ரேகைமின்ன வருகுமெந்தன்சாவல்
வருகுமெந்தன்சாவல்தனை வழிமரித்தவளாரோ
அஞ்சுவர்னநிறமுடைய அன்னநடைசாவல்
அன்னநடைசாவல்தனை அடக்கிக்கொண்டவளாரோ
கூவுங்குயில்தொனியுடனே கூவிவருஞ்சாவல்
கூவிவருஞ்சாவல்தனை கூப்பிட்டவளாரோ
பாப்பாரவீதியெங்கும் பறந்துவருஞ்சாவல்
பறந்துவருஞ்சாவல்தனைப் பார்த்தழைத்தவளாரோ
அரசர்கள்வீதிதனில் ஆடிவரும்சாவல்
ஆடிவருஞ்சாவல்தனை ஆதரித்தவளாரோ
வணிகர்தெருவெங்கும்வழக் காடிவருஞ்சாவல்
வழக்காடிவரும்சாவல்தனை வளைத்துக்கொண்டவளாரோ
கோமட்டிவீதியெங்கும் கொக்கரித்துவருஞ்சாவல்
கொக்கரித்துவரும்சாவல்தனை கொள்ளைகொண்டவளாரோ
குச்சிலியர்வீதியெங்கும் கூத்தாடிவரும்சாவல்
கூத்தாடிவரும்சாவல்தனை கூப்பிட்டவளாரோ
வெள்ளாழர்வீதியில் விளையாடிவரும்சாவல்
விளையாடிவரும்சாவல்தனை வெறுக்கச்செய்தவளாரோ

தச்சர்தெருவெங்குங்குதித் தாடிவரும்சாவல்
  ஆடிவரும்சாவல்தனை அழைத்துக்கொண்டவளாரோ
கோட்டைகொத்தளங்கள் குலாவிவரும்சாவல்
  குலாவிவருஞ்சாவல்தனை கொடுமைசெய்தவளாரோ
கன்ணாவீதியெங்கும் கலந்துவருஞ்சாவல்
  கலந்துவருஞ்சாவல்தனை கன்னமிட்டவளாரோ
எட்டுதெருசுத்திவரு மெந்தனிடசாவல்
  எந்தனிடசாவல்மீதில் இஷ்டம்வைத்தவளாரோ
பட்டணத்துவீதியெங்கும் பாய்ந்துவருஞ்சாவல்
  பாய்ந்துவரும்சாவல்தனை பதைத்தழைத்தவளாரோ
பூவின்கடைபுழுதிதனில் புரண்டுவருஞ்சாவல்
  புரண்டுவரும்சாவல்தனை பிடித்துக்கொண்டவளாரோ
பெரியகடைவீதியெங்கும் பேரெடுத்தசாவல்
  பேரெடுத்தசாவல்தனை பிசகுசெய்தவளாரோ
செங்காங்கடைவீதியெங்குந் திரிந்துவரும்சாவல்
  திரிந்துவரும்சாவல்தனை திருடினவளாரோ
கொத்தவால்சாவடியில் கொக்கரிக்குஞ்சாவல்
  கொக்கரிக்கும்சாவல்தனை கோரிக்கொண்டவளாரோ
மார்க்கட்டுவீதியெங்கும் மருவிவருஞ்சாவல்
  மருவிவருஞ்சாவல்தனை மறைத்துக்கொண்டவளாரோ

அந்தமிகுமண்ணடியி லாடிவருஞ்சாவல்
ஆடிவரும்சாவல்மீது அன்புவைத்தவளாரோ
தங்கசாலைவீதியெங்குந் தங்கிவரும்சாவல்
தங்கிவரும்சாவல்தனை சதிசெய்தவளாரோ
பெத்துநாய்க்கன்பேட்டையெங்கும் புகழ்பெருகும்சாவல்
புகழ்பெருகும்சாவல்மீதில் பிரியம்வைத்தவளாரோ
விலைமாதர்கள்வீதியில் விளையாடிவரும்சாவல்
விளையாடிவரும்சாவல்தனை வேறுசெய்தவளாரோ
காளியுடகோயிலுக்கு கனமாய்விட்டசாவல்
கனமாய்விட்டசாவல்தனை கட்டினவளாரோ
அங்காளம்மன்கோவிலுக்கு அடிமைவிட்டசாவல்
அடிமைவிட்டசாவல்தனை அணைத்துக்கொண்டவளாரோ
எல்லைப்பிடாரியர்க்கு யேத்திவிட்டசாவல்
யேத்திவிட்டசாவல்மீது இன்பங்கொண்டவளாரோ
பாவாடைராயனுக்கு பார்த்துவிட்டசாவல்
பார்த்துவிட்டசாவல்தனை பதிகுலைத்தவளாரோ
காத்தான்கருப்பனுக்கு காட்டிவிட்டசாவல்
காட்டிவிட்டசாவல்தனை கைப்பிடித்தவளாரோ
பேர்பெரியமுனியனுக்கு பிரார்த்திவிட்டசாவல்
பிரார்த்திவிட்டசாவல்தனை பேதித்தவளாரோ

சாவல்தனைக்காணாமலே தயங்குதென்னாவி
    எங்கள்துரைரங்கசாமி யென்னசொல்லுவாரோ
மாயமலைபழனிவடி வேலர்கிருபைசெய்வாய்
    மனதுகுறைவையாம லேவரச்செய்குவாய்
காளிமகமாயியுந்தன் கடியமலர்போற்றி
    கலங்கிடாமல்சாவல்தனை கடுகவரச்செய்வாய்
மாமதுரையேயெந்தன் மனதுதயங்காமல்
    வர்ணமுள்ள சாவல்தனை வருகவருட்செய்வாய்
ஆரணிபெரியபாளையத்தி லமர்ந்தயெந்தன்தாயே
    அன்னநடைசாவல்தனை அழகாய்வரச்செய்வாய்
கானமலையிருளாயுந்தன் கழலிணையைப்பணிந்தேன்
    கணவன்வராமுன்னேசாவல் கடுவரச்செய்வாய்
அண்ணமார்கள்கன்னியர்கள் அய்யமார்கள்துணைசெய்
    அன்பாயெந்தன்சாவல்தனை அனுக்கிரகஞ்செய்வீரே
சாதங்கறிவிளநீர்சுகி தாம்பூலம்பாயாசம்
    தக்கபடிமொச்சையெள் ளுருண்டையுடன்படைப்பேன்
கன்னவிளங்கரும்புகற் கண்டுசர்க்கரையும்
    கனியவாழைபழவர்க்கந்தேன் தினைமாவுடன்படைப்பேன்
பூவாடைக்காரியர்க்கு பொங்கல்மிகச்செய்வேன்
    புள்ளிநிறச்சாவல்தனை புகழாய்வரச்செய்வீர்

சொன்னசொல்லைத்தவரேனென்றும் சுந்திரதேவர்களே
துணைவன்வராமுன்னேசாவல் துரிதமாய்வரச்செய்வீர்
கண்ணேநவமணியேயென்றன் கருத்தேயெங்கேபோனாய்
கட்டுண்டிருந்தாயோவெந்தன் கவனமறந்தாயோ
ஆட்டிவளர்த்தேனேவுனக் காகவலைந்தேனே
அய்யன்ரங்கசாமிகண்டா லடிப்பார்வைகுவாரே
ஆர்செய்தபுண்ணியமோ அன்பாகவந்ததுவே
தேவர்களும்வாழி திருச் சபையோர்களும்வாழி
மூவர்களும்வாழிமுடி மன்னர்களும்வாழி
ஆவலுடன்வினவுமிஷ்ட அம்மையரும்வாழி
அச்சிலடித்தோர்களும்வாழி பதங்கேட்டோர்களும்வாழி
வாழிவாழியென்று வையகத்தோர்தாம்வாழி.

சாவல்பாட்டு,

முற்றிற்று.

---